BASEL LANDSCHAFT
VOLKSWIRTSCHAFTS- UND GESUNDHEITSDIREKTION
AMT FÜR GESUNDHEIT

# வழிகாட்டி «விரும்பாமல் கர்ப்பமா?»

BASEL LANDSCHAFT

## ஆலோசனை பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு- இலவசமாக, நம்பிக்கையாக, நடுநிலையாக

ஒரு திட்டமிடாத கருத்தரிப்பு பல கேள்விகளை மற்றும் எதிர்மறையான உணர்வுகளைத் தோற்றுவிக்கலாம். மத்திய அரச சட்டத்தின் பிரகாரம் இப்படியான சந்தர்ப்பத்தில் இலவசமான துறைசார் ஆலோசனை மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுண்டு, அதாவது கருவைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கோ அல்லது அதைக் கலைப்பதற்கோ விருப்பம் எதுவாக இருப்பினும் இதை மேற்கொள்ளலாம்.

நீங்கள் ஒரு சிக்கலான நிலையில் இருப்பதுடன், ஒரு முடிவை எடுப்பதற்கு கால அவகாசம் தேவைப்பட்டால் அல்லது உங்கள் தனிப்பட்ட நிலைமை குறித்து ஒரு மனம்திறந்த கலந்துரையாலை விரும்பினால், நீங்கள் உத்தியோகபூர்வமான மாநில ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், அவர்கள் உங்களுக்கு சமூக, உளவியல், நிதி மற்றும் சட்ட ரீதியான கேள்விகளுக்கு மேலதிக உதவிகளை வழங்குவார்கள்.

நீங்கள் ஒரு சரியான முடிவை எடுப்பதற்கு, இப்படியான ஆலோசனை உங்களுக்கு உதவ முடியும். நீங்கள் விரும்பினால், நீங்கள் உங்களது துணைவர், உங்களது துணைவி அல்லது உங்களுக்குப் பொறுப்பான நபரை இந்த ஆலோசனைக்கு அழைத்து வரலாம்.

இதில் சம்பந்தப்பட்ட நீங்கள் மட்டுமே இறுதியில் கருவைக் கலைப்பதா அல்லது இல்லையா என்ற முடிவை எடுக்கும் நிலையிருக்கும்.
நீங்கள் இந்த ஆலோசனை நிலையத்தை, கருவைக் கலைத்த பின்பாகவோ அல்லது கருத்தடை குறித்த கேள்விகளுக்காகவோ நாடலாம்.

## கருவைக் கலைப்பதற்கு நீங்கள் முடிவெடுத்துள்ளீர்கள்

இப்படியான நிலையில் உங்கள் ஆண்/பெண் வைத்தியர் உங்களுடன் ஒரு விளக்கமான கலந்துரையாடலை மேற்கொள்வதுடன், உங்களுக்கு சட்ட விதிகள், மருத்துவ ரீதியான செயல்முறை, அத்துடன் உடல்நலத்திற்கு ஏற்றபடக்கூடிய ஆபத்துக்கள் குறித்து அறியத்தருவார்.

சட்ட வரையறையின்படி நீங்கள் உங்கள் முடிவை உங்களது கையொப்பமிட்டு உறுதிசெய்வதுடன், இதன்மூலம் கருவைக் கலைப்பதற்கான உத்தரவை வழங்குகின்றீர்கள்.

## நீங்கள் 16 வயதிற்கு உட்பட்டவர்

அப்படியானால் நீங்கள் வைத்தியரோடு கலந்துரையாடுவதுடன் கர்ப்பமுறும் இளையோருக்கான துறைசார் ஆலோசனை நிலையத்தையும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இந்த நம்பிக்கையான, இலவசமான ஆலோசனை 16 வயதுக்கு உட்பட்ட இளையோருக்கு **கட்டாயமானதாகும்.**

## நீங்கள் ஒரு அவசர நிலைமையில் உள்ளீர்களா?

நீங்கள் கருவுற்றுள்ளதை மற்றும் குழந்தையின் பிறப்பை எவரும் அறியக்கூடாது என்ற நிலையில் இருந்தால்: கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் மற்றும் பிறப்பிற்கு முன்பாகவும் பின்பாகவும் வைத்தியசாலையில் உங்களுக்கு ஒரு புனைபெயர், மற்றும் மருத்துவ, உளவள ஆலோசனை வழங்கப்படும். நீங்கள் உங்கள் பிள்ளையை நம்பிக்கையான வகையில் உலகில் பிரசவிக்கலாம், அதாவது உங்கள் அயலார் எவரும் பிறப்பு விடயத்தை அறிந்துகொள்ள மாட்டார்கள். சிவில் பதிவுத் திணைக்களம் பிறப்பை «நம்பிக்கையான பிறப்பு» எனப் பதிவுசெய்யும், வதிவிடப் பதிவுத் திணைக்களத்தில் தாமாகவே பதிந்துகொள்ளவேண்டிய தேவை இருக்காது. இதன்மூலம் தாயின் பெயர் இரகசியமாக வைத்துப் பாதுகாக்கப்படும்.

## தத்தெடுத்தல்

ஒரு பிள்ளை பிறந்த பின்பு அதை தத்தெடுப்பதற்குக் கொடுப்பதென்பது, மிகக் கடினமான ஒரு முடிவாகும், இதற்கு ஆழமான யோசனைகள் மற்றும் கலந்துரையாடல்கள் தேவைப்படும்.

இதற்காக உங்களுக்கு உத்தியோகபூர்வமான ஆலோசனை நிலையங்கள் அல்லது பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சுவிஸில் தத்தெடுக்கும் பிள்ளைகள் நிலையம் உதவ ஆயத்தமாக உள்ளது. www.pa-ch.ch

BASEL LANDSCHAFT

## முகவரிகள்

பிரச்சினைகளின்போது உடனடியான கலந்துரையாடலுக்கு நீங்கள் எந்த நேரத்திலும் **தொலைபேசி இலக்கம்** 143 ஐ தொடர்பு கொள்ளலாம்.

மாநில ரீதியான உத்தியோகபூர்வ ஆலோசனை நிலையம், பாலியல் உடல்நலம் மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட இளையோருக்கான துறைசார் நிலையம்: www.bsb-bl.ch

Beratungsstelle Binningen
(ஆலோசனை நிலையம் பென்னிங்கன்)
Hauptstrasse 85 A
4102 Binningen
Tel: 061 413 24 00
binningen@bsb-bl.ch

Beratungsstelle Liestal
(ஆலோசனை நிலையம லீஸ்ரால்)
Rathausstrasse 6
4410 Liestal
Tel: 061 921 60 13
liestal@bsb-bl.ch

## மேலதிகமாக

Ambulatorium Frauenklink Kantonsspital Baselland, Liestal
(ஆம்புலற்ரோறியும் பெண்கள்வைத்திய நிலையம் கன்ரோன் வைத்தியசாலை லீஸ்ரால்)
Tel: 061 925 22 04, www.ksbl.ch

APAC, praktische Informationen über den Schwangerschaftsabbruch
(கர்ப்பத்தை அழிப்பதற்கான நடத்தக்கூடிய அறிவித்தல்கள்)
www.schwangerschaftsabbruch.org

Stelle für Pflege- und Adoptivkinder Schweiz
(பராமரிப்பு மற்றும் பிள்ளைகளைத்தத்தெடுக்கும் நிலயம் சுவிஸ்)
www.pa-ch.ch